அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

செய்தி ஆசிரியர்.
அனைத்து ஊடகங்கள்

ந.க.எண். 019054 / டி / 2021 நாள் : 05.10.2021

ஐயா/அம்மையீர்,

பொருள் : தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, நவம்பர்–2021 – தனித்தேர்வர்களிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்பது மற்றும் தேர்வுக்கால அட்டவணை குறித்து வானொலி / தொலைக்காட்சிகளில் அறிவிக்கவும் நாளிதழ்களில் செய்திக் குறிப்பாக வெளியிடக் கோருதல் – சார்பு

*****

நவம்பர்–2021 –இல் நடைபெறவிருக்கும் தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு தனித் தேர்வர்களிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்வது மற்றும் தேர்வுக்கால அட்டவணை குறித்தான **செய்திக்குறிப்பு** இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பொதுமக்களின் நலன்கருதி மேற்படி தகவல்களை அனைத்து மாவட்டங்களிலும் இதனை வானொலியில் / தொலைக்காட்சிகளில் / பத்திரிகையில் செய்தியாக ஒலி / ஒளி பரப்புமாறும் / வெளியிடுமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இது “**விளம்பரம் அல்ல** ” என தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

**இணைப்பு**
செய்திக்குறிப்பு மற்றும் தேர்வுக்கால அட்டவணை

## தமிழ்நாடு அரசு
## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –600 006
## தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, நவம்பர் – 2021
## செய்திக்குறிப்பு

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்**

நவம்பர் 2021– இல் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு **01.10.2021** அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் **11.10.2021 (திங்கள்கிழமை முதல் 18.10.2021 ( திங்கள்கிழமை ) வரை காலை 10.00 மணி** முதல் **மாலை 5.45 வரை** (14.10.2021 முதல் 17.10.2021 வரையிலான விடுமுறை நாட்கள் நீங்கலாக) **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) நேரில் சென்று on line மூலம் பதிவு செய்து கொள்ளலாம். **மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 20.10.2021 அன்று தட்கல் திட்டத்தில் ரூ.500/– கூடுதலாக செலுத்தி விண்ணப்பிக்கலாம்.**

2. **தேர்வுக் கட்டண விவரம்**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/– மற்றும் ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–மொத்தம் ரூ.175/–ஐ பணமாக சேவை மையங்களில் நேரடியாக செலுத்தலாம். **தட்கலில் விண்ணப்பித்த தேர்வர்கள் தட்கல் விண்ணப்ப கட்டணத்தொகை ரூ.675/– செலுத்தவேண்டும்.( 125 + 50 + 500 )**

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை**

**1. முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் சான்றிடப்பட்ட தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**2.ஏற்கனவே எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின்/சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

- தனித்தேர்வர்கள் ரூ.42–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை ஒன்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

ஒம்/-
இயக்குநர்

இடம் : சென்னை–600 006
நாள் : 05.10.2021

தமிழ்நாடு அரசுத்தேர்வுகள் இயக்ககம் - சென்னை-6

எட்டாம் வகுப்பு - தனித்தேர்வர்களுக்கான பொதுத்தேர்வு

நவம்பர் - 2021

தேர்வுக்கால அட்டவணை

| நாள் | கிழமை | நேரம் | பாடம் |
|---|---|---|---|
| 08. 11. 2021 | திங்கள் | காலை 10.00 மணி முதல்; 12.00 மணி | தமிழ் |
| 09. 11. 2021 | செவ்வாய் | காலை 10.00 மணி முதல்; 12.00 மணி | ஆங்கிலம் |
| 10. 11. 2021 | புதன் | காலை 10.00 மணி முதல்; 12.00 மணி | கணிதம் |
| 11. 11. 2021 | வியாழன் | காலை 10.00 மணி முதல்; 12.00 மணி | அறிவியல் |
| 12. 11. 2021 | வெள்ளி | காலை 10.00 மணி முதல்; 12.00 மணி | சமூக அறிவியல் |

ஒம்/-
இயக்குநர்

இடம்: சென்னை -6.
நாள்: 05.10.2021